## سُوْرَةُ الْاَحْقَافِ مَكِّيَّةٌ وَّهِيَ خَمْسٌ وَّثَلٰثُوْنَ اٰيَةً وَّاَرْبَعُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

حٰمٓ ﴿١﴾ تَنْزِيْلُ الْكِتٰبِ مِنَ اللّٰهِ الْعَزِيْزِ الْحَكِيْمِ ﴿٢﴾
مَا خَلَقْنَا السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَمَا بَيْنَهُمَآ اِلَّا بِالْحَقِّ وَاَجَلٍ
مُّسَمًّى ؕ وَالَّذِيْنَ كَفَرُوْا عَمَّآ اُنْذِرُوْا مُعْرِضُوْنَ ﴿٣﴾ قُلْ اَرَءَيْتُمْ
مَّا تَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ اَرُوْنِيْ مَاذَا خَلَقُوْا مِنَ الْاَرْضِ
اَمْ لَهُمْ شِرْكٌ فِي السَّمٰوٰتِ ؕ اِيْتُوْنِيْ بِكِتٰبٍ مِّنْ قَبْلِ هٰذَآ اَوْ
اَثٰرَةٍ مِّنْ عِلْمٍ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿٤﴾ وَمَنْ اَضَلُّ مِمَّنْ يَّدْعُوْا
مِنْ دُوْنِ اللّٰهِ مَنْ لَّا يَسْتَجِيْبُ لَهٗٓ اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ وَهُمْ عَنْ
دُعَآئِهِمْ غٰفِلُوْنَ ﴿٥﴾ وَاِذَا حُشِرَ النَّاسُ كَانُوْا لَهُمْ اَعْدَآءً وَّ
كَانُوْا بِعِبَادَتِهِمْ كٰفِرِيْنَ ﴿٦﴾ وَاِذَا تُتْلٰى عَلَيْهِمْ اٰيٰتُنَا بَيِّنٰتٍ
قَالَ الَّذِيْنَ كَفَرُوْا لِلْحَقِّ لَمَّا جَآءَهُمْ ۙ هٰذَا سِحْرٌ مُّبِيْنٌ ؕ ﴿٧﴾
اَمْ يَقُوْلُوْنَ افْتَرٰىهُ ؕ قُلْ اِنِ افْتَرَيْتُهٗ فَلَا تَمْلِكُوْنَ
لِيْ مِنَ اللّٰهِ شَيْئًا ؕ هُوَ اَعْلَمُ بِمَا تُفِيْضُوْنَ فِيْهِ ؕ كَفٰى بِهٖ
شَهِيْدًا بَيْنِيْ وَبَيْنَكُمْ ؕ وَهُوَ الْغَفُوْرُ الرَّحِيْمُ ﴿٨﴾

அத்தியாயம் : 46

## அல் அஹ்காஃப் _ மணல் மேடுகள்

வசனங்கள் : 35 மக்கீ ருகூஃகள் : 4

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. ஹாமீம்

2. (யாவரையும்) மிகைத்தோன்; தீர்க்கமான அறிவுடையோன் ஆகிய அல்லாஹ்விடமிருந்தே இவ்வேதம் இறக்கப்பட்டிருக்கிறது.

3. வானங்களையும் பூமியையும் அவை இரண்டிற்கு மத்தியில் உள்ளவைகளையும், உண்மையைக் கொண்டும், குறிப்பிடப்பட்ட தவணையையும் கொண்டே தவிர நாம் படைக்கவில்லை; மேலும், (அல்லாஹ்வை) நிராகரிக்கின்றார்களே அத்தகையோர், அவர்கள் தங்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டதைவிட்டும் புறக்கணிக்கின்றவர்களாக இருக்கின்றனர்.

4. (ஆகவே நபியே ! அவர்களிடம்) நீர் கூறுவீராக: அல்லாஹ்வையன்றி நீங்கள் அழைக்கின்றவற்றை நீங்கள் பார்த்தீர்களா? பூமியிலிருந்து எதனை அவர்கள் படைத்திருக்கிறார்கள்? அல்லது வானங்களின் படைப்பில் அவர்களுக்குக் கூட்டு உண்டா? என்பதை நீங்கள் எனக்குக் காண்பியுங்கள்! நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இதற்கு (ஆதாரமாக) முன்னுள்ள யாதொரு வேதத்தையோ, அல்லது (முன்னோர்களில் யாரிடமிருந்தாவது கிடைக்கப்பெற்ற) அடிச்சுவட்டிலிருந்து (எஞ்சியிருக்கும்) அறிவு ஆதாரத்தையோ கொண்டுவாருங்கள்.

5. மேலும், அல்லாஹ்வை விடுத்து மறுமை நாள் வரை (அழைத்த போதிலும்) தனக்கு பதில் கொடுக்காதவர்களை அழைப்பவனைவிட மிக வழி கெட்டவன் யார்? அவர்களோ, இவர்களுடைய அழைப்பைப் பற்றி மறந்தவர்களாக உள்ளனர்.

6. மேலும், மனிதர்கள் (மறுமை நாளுக்காக) ஒன்றுதிரட்டப் பட்டால், (வணங்கப் பட்டவர்களான) அவர்கள் இவர்களுக்கு விரோதிகளாக இருப்பர். இவர்கள் (தங்களை) வணங்கிக் கொண்டிருந்ததையும் அவர்கள் நிராகரித்து விடுவர்.

7. இன்னும், நம்முடைய வசனங்கள் தெளிவானவையாக அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டால், சத்திய(வேத)த்தை நிராகரித்து விட்டார்களே அத்தகையோர் _ அ(வ்வுண்மையான)து, அவர்களிடம் வந்தபோது இது தெளிவான சூனியமாகும் என்று கூறினார்கள்.

8. அல்லது, (நபியே! குர்ஆனாகிய) இதனை அவர் இட்டுக்கட்டிக் கொண்டார் என்று (உம்மைப்பற்றி) அவர்கள் கூறுகின்றனரா ? (அவ்வாறாயின், நபியே!) நீர் கூறுவீராக: "இதனை நான் இட்டுக்கட்டியிருந்தால் (அதற்காக ) அல்லாஹ்விடமிருந்து (உள்ள தண்டனையில்) எதையும் (தடுத்து என்னைக்காப்பாற்றிட) நீங்கள் சக்தி பெறமாட்டீர்கள்; இதைப்பற்றி (எனக்கு விரோதமாகக்கூறி) எதில் நீங்கள் மூழ்கியிருக்கிறீர்களோ, அவைகளை அவன் நன்குஅறிவான். (ஆகவே) எனக்கும், உங்களுக்கும் மத்தியில் சாட்சியாளனாக இருக்க அவனே இதற்குப் போதுமானவன்; அவனே மிக்க மன்னிப்போன்; பெரும் கிருபையுடையோன்.

قُلْ مَا كُنْتُ بِدْعًا مِّنَ الرُّسُلِ وَمَآ اَدْرِىْ مَا يُفْعَلُ بِىْ وَلَا بِكُمْ ؕ
اِنْ اَتَّبِعُ اِلَّا مَا يُوْحٰٓى اِلَىَّ وَمَآ اَنَا اِلَّا نَذِيْرٌ مُّبِيْنٌ ﴿۹﴾ قُلْ اَرَءَيْتُمْ
اِنْ كَانَ مِنْ عِنْدِ اللّٰهِ وَكَفَرْتُمْ بِهٖ وَشَهِدَ شَاهِدٌ مِّنْۢ بَنِىْٓ
اِسْرَآءِيْلَ عَلٰى مِثْلِهٖ فَاٰمَنَ وَاسْتَكْبَرْتُمْ ؕ اِنَّ اللّٰهَ لَا يَهْدِى الْقَوْمَ
الظّٰلِمِيْنَ ﴿۱۰﴾ وَقَالَ الَّذِيْنَ كَفَرُوْا لِلَّذِيْنَ اٰمَنُوْا لَوْ كَانَ خَيْرًا مَّا ع
سَبَقُوْنَآ اِلَيْهِ ؕ وَاِذْ لَمْ يَهْتَدُوْا بِهٖ فَسَيَقُوْلُوْنَ هٰذَآ اِفْكٌ قَدِيْمٌ ﴿۱۱﴾
وَمِنْ قَبْلِهٖ كِتٰبُ مُوْسٰٓى اِمَامًا وَّرَحْمَةً ؕ وَهٰذَا كِتٰبٌ مُّصَدِّقٌ
لِّسَانًا عَرَبِيًّا لِّيُنْذِرَ الَّذِيْنَ ظَلَمُوْا ۖ وَبُشْرٰى لِلْمُحْسِنِيْنَ ﴿۱۲﴾ اِنَّ
الَّذِيْنَ قَالُوْا رَبُّنَا اللّٰهُ ثُمَّ اسْتَقَامُوْا فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ
يَحْزَنُوْنَ ﴿۱۳﴾ اُولٰٓئِكَ اَصْحٰبُ الْجَنَّةِ خٰلِدِيْنَ فِيْهَا ۚ جَزَآءًۢ بِمَا كَانُوْا
يَعْمَلُوْنَ ﴿۱۴﴾ وَوَصَّيْنَا الْاِنْسَانَ بِوَالِدَيْهِ اِحْسٰنًا ؕ حَمَلَتْهُ اُمُّهٗ
كُرْهًا وَّوَضَعَتْهُ كُرْهًا ؕ وَحَمْلُهٗ وَفِصٰلُهٗ ثَلٰثُوْنَ شَهْرًا ؕ حَتّٰٓى اِذَا بَلَغَ
اَشُدَّهٗ وَبَلَغَ اَرْبَعِيْنَ سَنَةً ۙ قَالَ رَبِّ اَوْزِعْنِىْٓ اَنْ اَشْكُرَ نِعْمَتَكَ
الَّتِىْٓ اَنْعَمْتَ عَلَىَّ وَعَلٰى وَالِدَىَّ وَاَنْ اَعْمَلَ صَالِحًا تَرْضٰىهُ
وَاَصْلِحْ لِىْ فِىْ ذُرِّيَّتِىْ ؕ اِنِّىْ تُبْتُ اِلَيْكَ وَاِنِّىْ مِنَ الْمُسْلِمِيْنَ ﴿۱۵﴾

9. (நபியே!அவர்களிடம்,) நீர் கூறுவீராக: "(அல்லாஹ் அனுப்பிய) தூதர்களில் நான் புதியவனாக இருக்கவில்லை; மேலும், என்னைக்கொண்டும், உங்களைக் கொண்டும் என்ன செய்யப்படும் என்பதையும் நான் அறியேன்; எனக்கு வஹீ மூலமாக எதை அறிவிக்கப்படுகிறதோ அதைத்தவிர, (மற்றெதையும்) நான் பின்பற்றுவதில்லை; மேலும், நான் பகிரங்கமாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனேதவிர வேறில்லை."

10. (நபியே!) நீர் கூறுவீராக: நீங்கள் பார்த்தீர்களா? இ(வ்வேதமான)து அல்லாஹ்விடமிருந்து வந்ததாக இருந்து, இதை நீங்கள் நிராகரித்தும் விட்டவர்களாக இருக்கும் நிலையில் (இது உண்மையானது என) இஸ்ராயீலின் மக்களில் உள்ள சாட்சியாளர் இதுபோன்றதற்கு சாட்சியமும் கூறி (பின்னர் இதை) அவர் விசுவாசமும் கொண்டுள்ளார்; (ஆனால், இதை ஏற்காது) நீங்கள் பெருமையும் அடித்துக் கொண்டீர்கள் (ஆகவே, உங்களை விட அநியாயக் காரர்கள் யார்); நிச்சயமாக, அல்லாஹ் அநியாயக்கார சமூகத்தார்க்கு நேர்வழி காட்டமாட்டான்.

11. நிராகரிப்போர் விசுவாசிகளிடம்: "இது நன்மையானதாக இருந்தால், இதனளவில் அவர்கள் எங்களை முந்தியிருக்கமாட்டார்கள்; என்றும் கூறுகின்றனர்; அவர்கள் இ(வ்வுண்மையான வேதத்)தைக் கொண்டு நேர்வழியும் பெறாதபோது "இது பழைய பொய்யாகும்" என்று அவர்கள் கூறுவார்கள்.

12. இதற்குமுன் மூஸாவுடைய வேதம் வழி காட்டியாகவும் அருளாகவும் இருந்தது; (குர்ஆனாகிய) இது (அதனை) உண்மைப்படுத்துகிற அரபி மொழியிலான வேதமாகும்; (இது) அநியாயம் செய்வோரை அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும், நன்மை செய்வோருக்கு நன்மாராயமாகவும் இருக்கின்றது.

13. நிச்சயமாக, "எங்கள் இரட்சகன் அல்லாஹ்தான்" என்று கூறி (அதன்) பிறகு (அதில்) நிலைத்து இருக்கின்றார்களே, அத்தகையோர்_ அவர்களுக்கு (யாதொரு) பயமுமில்லை; அவர்கள் கவலையும் அடையமாட்டார்கள்.

14. அவர்கள் சுவனவாசிகள்; அவர்கள் செய்து கொண்டிருந்ததற்குக் கூலியாக நிரந்தரமாக அதில்(தங்கி)இருப்பவர்கள்.

15. மேலும், தன்னுடைய பெற்றோர்க்கு நன்மை செய்யுமாறு, மனிதனுக்கு நாம் உபதேசம் செய்தோம்; அவனுடைய தாய், சிரமத்துடன் அவனைச் சுமந்திருந்து, சிரமத்துடன் அவனைப் பிரசவிக்கின்றாள்; (அவள்) கர்ப்பத்தில் அவனைச் சுமப்பதும், அவனுக்குப் பால்குடி மறக்கச் செய்வதும் முப்பது மாதங்களாகும். முடிவாக இவன் வாலிபமாகி, நாற்பது வயதை அடைந்ததும்: "என் இரட்சகனே! நீ என் மீதும், என் பெற்றோர்மீதும் புரிந்த உன் அருளுக்காக உனக்கு நான் நன்றி செலுத்தி, நீஎதனைப் பொருந்திக்கொள்வாயோ அந்த நற்செயலைச் செய்யவும் (நல்லறிவை) நீ எனக்கு உதிக்கச்செய்வாயாக! எனக்காக என்னுடைய சந்ததியில் (உள்ளோரை) நீ சீர்திருத்தியும் வைப்பாயாக! நிச்சயமாக, நான் தவ்பா செய்து உன் பக்கம் திரும்பிவிட்டேன்; நிச்சயமாக, நானோ (உனக்கு முற்றிலும் கீழ்ப்படிந்த) முஸ்லிம்களில் (ஒருவனாகவும்) இருக்கிறேன்" என்று கூறுவான்.

اُولٰٓئِكَ الَّذِيْنَ نَتَقَبَّلُ عَنْهُمْ اَحْسَنَ مَا عَمِلُوْا وَنَتَجَاوَزُ عَنْ سَيِّاٰتِهِمْ
فِيْٓ اَصْحٰبِ الْجَنَّةِ ۭ وَعْدَ الصِّدْقِ الَّذِيْ كَانُوْا يُوْعَدُوْنَ ۝۱۶ وَالَّذِيْ
قَالَ لِوَالِدَيْهِ اُفٍّ لَّكُمَآ اَتَعِدٰنِنِيْٓ اَنْ اُخْرَجَ وَقَدْ خَلَتِ الْقُرُوْنُ
مِنْ قَبْلِيْ ۚ وَهُمَا يَسْتَغِيْثٰنِ اللّٰهَ وَيْلَكَ اٰمِنْ اِنَّ وَعْدَ اللّٰهِ حَقٌّ ۚ
فَيَقُوْلُ مَا هٰذَآ اِلَّآ اَسَاطِيْرُ الْاَوَّلِيْنَ ۝۱۷ اُولٰٓئِكَ الَّذِيْنَ حَقَّ عَلَيْهِمُ
الْقَوْلُ فِيْٓ اُمَمٍ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِمْ مِّنَ الْجِنِّ وَالْاِنْسِ ۭ اِنَّهُمْ
كَانُوْا خٰسِرِيْنَ ۝۱۸ وَلِكُلٍّ دَرَجٰتٌ مِّمَّا عَمِلُوْا ۚ وَلِيُوَفِّيَهُمْ اَعْمَالَهُمْ
وَهُمْ لَا يُظْلَمُوْنَ ۝۱۹ وَيَوْمَ يُعْرَضُ الَّذِيْنَ كَفَرُوْا عَلَى النَّارِ ۭ
اَذْهَبْتُمْ طَيِّبٰتِكُمْ فِيْ حَيَاتِكُمُ الدُّنْيَا وَاسْتَمْتَعْتُمْ بِهَا ۚ فَالْيَوْمَ
تُجْزَوْنَ عَذَابَ الْهُوْنِ بِمَا كُنْتُمْ تَسْتَكْبِرُوْنَ فِي
الْاَرْضِ بِغَيْرِ الْحَقِّ وَبِمَا كُنْتُمْ تَفْسُقُوْنَ ۝۲۰ وَاذْكُرْ اَخَا ع ۲ ۲
عَادٍ ۭ اِذْ اَنْذَرَ قَوْمَهٗ بِالْاَحْقَافِ وَقَدْ خَلَتِ النُّذُرُ مِنْۢ
بَيْنِ يَدَيْهِ وَمِنْ خَلْفِهٖٓ اَلَّا تَعْبُدُوْٓا اِلَّا اللّٰهَ ۭ اِنِّىْٓ اَخَافُ
عَلَيْكُمْ عَذَابَ يَوْمٍ عَظِيْمٍ ۝۲۱ قَالُوْٓا اَجِئْتَنَا لِتَاْفِكَنَا
عَنْ اٰلِهَتِنَا ۚ فَاْتِنَا بِمَا تَعِدُنَآ اِنْ كُنْتَ مِنَ الصّٰدِقِيْنَ ۝۲۲

16. அவர்கள் எத்தகையோரென்றால்_சொர்க்க வாசிகளில் உள்ளவர்களாக இருக்க, அவர்கள் செய்தவற்றில்(உள்ள)மிக அழகானதை நாம் அங்கீகரித்துக் கொண்டு, அவர்களுடைய தீமைகளை விட்டும் புறக்கணித்து விடுவோம்; அவர்கள் வாக்களிக்கப் பட்டிருந்தார்களே அத்தகையது உண்மையான வாக்குறுதியாகும்.

17. ஒருவன் தன் பெற்றோரிடம்,(அவர்கள் மறுமையைப் பற்றிக் கூறிய நன் மொழிகளை மறுத்துஇகழ்ச்சிக்குரிய வார்த்தையான), " சீச்சீ! உங்களுக்கென்ன நேர்ந்தது! நான் இறந்த பின் உயிர்ப்பித்து வெளியாக்கப்படுவேன் என்று நீங்கள் இருவரும் என்னை பயமுறுத்துகிறீர்களா? திட்டமாக எனக்கு முன்னர் எத்தனையோ தலைமுறையினர் சென்றுவிட்டனர், (அவர்களின் நிலை என்ன?)" என்று கூறுகிறான்; (அவனது தீமையிலிருந்து காத்து) இரட்சிக்குமாறு அவ்விருவரும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்து (பின்னர் அவனிடம்) "உனக்கென்ன கேடு? நீ (அல்லாஹ்வை) விசுவாசிப்பாயாக! நிச்சயமாக, அல்லாஹ்வுடைய வாக்குறுதி உண்மையானது" (என்றும் கூறுகின்றார்கள்); அப்பொழுது, "இவைகளெல்லாம் முன்னோரின் கட்டுக் கதைகளேயன்றி வேறில்லை;" என்று அவன் கூறுகின்றான்.

18. (இவ்வாறுகூறும்) இத்தகையோர் _ இவர்களுக்கு முன் சென்று போன மனு, ஜின்களிலுள்ள சமூகத்தார்களில் (பாவம் செய்தால், அல்லாஹ்வுடைய வேதனை வந்திறங்கியே தீருமென்ற)இரட்சகனின் கூற்று அவர்களின் மீது உண்மையாகி விட்டது; நிச்சயமாக, அவர்கள் நஷ்டமடைந்தவர்களாகிவிட்டனர்.

19. (இவர்களில்) ஒவ்வொருவருக்கும் அவ(ரவ)ர்கள் செயலுக்குத் தக்க பதவி களிருக்கின்றன; அவர்களின் செயல்(களுக்குரிய கூலி)களை அவன் அவர்களுக்கு நிறைவு செய்வதற்காகவும், (பதவிகளை நல்குகிறான்;) அவர்கள் அநீதமிழைக்கப்படவும் மாட்டார்கள்.

20. அன்றியும், நிராகரிப்போர் நரகத்தின் முன் கொண்டுவரப்படும் நாளில் (அவர்களிடம்), " உங்களுடைய நல்லவைகளை உங்களுடைய உலகவாழ்க்கையில் நீங்கள் போக்கிவிட்டீர்கள், அவற்றைக்கொண்டு இன்பமனுபவித்தும் விட்டீர்கள்; ஆகவே, நீங்கள் பூமியில் நியாயமின்றிப் பெருமையடித்துக் கொண்டிருந்த காரணத்தாலும், இன்னும், பாவம் செய்துகொண்டிருந்த காரணத்தாலும் இழிவு தரும் வேதனையை இன்றையத் தினம் நீங்கள் கூலியாகக் கொடுக்கப்படுவீர்கள்" (என்று கூறப்படும்).

21. (நபியே!) நீர், (ஹூத் நபியாகிய) " ஆது" உடைய சகோதரரை நினைவு கூர்வீராக! அவர் மணல் குன்றுகளில் (குடி) இருந்த தன் சமூகத்தாரை எச்சரிக்கை செய்த போது, அவருக்கு முன்னும், அவருக்குப் பின்னும் எச்சரிக்கை செய்வோர் திட்டமாக வந்து சென்று விட்டனர்; (அவர் தன் சமூகத்தாரிடம்) "அல்லாஹ்வை யன்றி (வேறெதனையும்) நீங்கள் வணங்காதீர்கள்; நிச்சயமாக, மகத்தான நாளின் வேதனையை உங்கள்மீது நான் பயப்படுகிறேன்" (என்றார்).

22. அ(தற்க)வர்கள், " எங்களுடைய (வணக்கத்திற்குரிய) தெய்வங்களை விட்டு, எங்களைத் திருப்பிவிட நீர் எங்களிடம்வந்தீரா? நீர் உண்மையாளர்களில் இருந்தால், நீர் எங்களுக்கு எதைக் கொண்டுவாக்களித்தீரோ அ(வ்வேதனை யான)தை நம்மிடம்கொண்டு வாரும்" என்று கூறினார்கள்.

قَالَ اِنَّمَا الْعِلْمُ عِنْدَ اللّٰهِ ۖ وَاُبَلِّغُكُمْ مَّاۤ اُرْسِلْتُ بِهٖ وَلٰكِنِّیْۤ
اَرٰىكُمْ قَوْمًا تَجْهَلُوْنَ ﴿٢٣﴾ فَلَمَّا رَاَوْهُ عَارِضًا مُّسْتَقْبِلَ اَوْدِیَتِهِمْ ۙ
قَالُوْا هٰذَا عَارِضٌ مُّمْطِرُنَا ؕ بَلْ هُوَ مَا اسْتَعْجَلْتُمْ بِهٖ ؕ رِیْحٌ
فِیْهَا عَذَابٌ اَلِیْمٌ ﴿٢٤﴾ تُدَمِّرُ كُلَّ شَیْءٍۭ بِاَمْرِ رَبِّهَا
فَاَصْبَحُوْا لَا یُرٰۤى اِلَّا مَسٰكِنُهُمْ ؕ كَذٰلِكَ نَجْزِی الْقَوْمَ
الْمُجْرِمِیْنَ ﴿٢٥﴾ وَلَقَدْ مَكَّنّٰهُمْ فِیْمَاۤ اِنْ مَّكَّنّٰكُمْ فِیْهِ
وَجَعَلْنَا لَهُمْ سَمْعًا وَّاَبْصَارًا وَّاَفْـِٕدَةً ۖؗ فَمَاۤ اَغْنٰى عَنْهُمْ
سَمْعُهُمْ وَلَاۤ اَبْصَارُهُمْ وَلَاۤ اَفْـِٕدَتُهُمْ مِّنْ شَیْءٍ اِذْ
كَانُوْا یَجْحَدُوْنَ بِاٰیٰتِ اللّٰهِ وَحَاقَ بِهِمْ مَّا كَانُوْا بِهٖ
یَسْتَهْزِءُوْنَ ﴿٢٦﴾ وَلَقَدْ اَهْلَكْنَا مَا حَوْلَكُمْ مِّنَ الْقُرٰى ٣ ع٦ ٣
وَصَرَّفْنَا الْاٰیٰتِ لَعَلَّهُمْ یَرْجِعُوْنَ ﴿٢٧﴾ فَلَوْلَا نَصَرَهُمُ
الَّذِیْنَ اتَّخَذُوْا مِنْ دُوْنِ اللّٰهِ قُرْبَانًا اٰلِهَةً ؕ بَلْ ضَلُّوْا
عَنْهُمْ ۚ وَذٰلِكَ اِفْكُهُمْ وَمَا كَانُوْا یَفْتَرُوْنَ ﴿٢٨﴾ وَاِذْ صَرَفْنَاۤ
اِلَیْكَ نَفَرًا مِّنَ الْجِنِّ یَسْتَمِعُوْنَ الْقُرْاٰنَ ۚ فَلَمَّا حَضَرُوْهُ
قَالُوْۤا اَنْصِتُوْا ۚ فَلَمَّا قُضِیَ وَلَّوْا اِلٰى قَوْمِهِمْ مُّنْذِرِیْنَ ﴿٢٩﴾

23. அ(தற்க)வர், ("வேதனை எப்பொழுது என்ற) அறிவு எல்லாம் அல்லாஹ் விடமே இருக்கின்றது; அன்றியும், எதனைக்கொண்டு நான் அனுப்பப் பட்டேனோ அதனையே நான் உங்களுக்கு எத்திவைக்கிறேன்; என்றாலும் உங்களை நான் அறிவில்லாத சமூகத்தவராகவே காணுகிறேன்" என்றார்.

24. பின்னர், அதனை தம்முடைய பள்ளத் தாக்குகளை முன்னோக்கி வருகின்ற மேகமாக அவர்கள் கண்டபோது,இது எங்களுக்குமழைபெய்ய வரும்மேகம்தான் என்று கூறினார்கள்;(அதற்கு அவர்களிடம்)" அப்படியல்ல! இது நீங்கள் எதற்காக அவசரப்பட்டீர்களோ அது தான்;(இது ஒரு)கொடுங்காற்று,இதில் துன்புறுத்தும் வேதனை இருக்கின்றது"(என்றும்),

25. அது தன் இரட்சகனின் கட்டளைப்படி சகல பொருட்களையும் அழித்து விடும்(என்றும் ஹூத் கூறினார். அவர்கள் வசித்திருந்து அழிந்த) அவர்களுடைய குடியிருப்புகளைத் தவிர வேறொன்றும் காணப்படாதவாறு காலையில் அவர்கள்(அழிவிற்குள்)ஆகி விட்டனர்; இவ்வாறே குற்றவாளிகளான கூட்டத்தினருக்கு நாம் கூலி கொடுக்கின்றோம்.

26. மேலும், உங்களுக்கு எதில் நாம் வசதி செய்து கொடுக்கவில்லையோ அதில் அவர்களுக்குத் திட்டமாக நாம் வசதி செய்து கொடுத்திருந்தோம்; மேலும், அவர்களுக்குச் செவிப்புலனையும், பார்வைகளையும், இதயங்களையும் நாம் ஆக்கினோம்; ஆயினும் அவர்கள் அல்லாஹ்வுடைய வசனங்களை நிராகரித்துக் கொண்டிருந்தவர்களாக இருந்த சமயத்தில் அவர்களுடைய செவிப்புலனும், அவர்களுடையபார்வைகளும், அவர்களுடைய இதயங்களும் அவர்களுக்கு யாதொரு பயனுமளிக்கவில்லை; எதனை அவர்கள் பரிகாசம் செய்து கொண்டிருந்தார்களோ அது அவர்களைச் சூழ்ந்தும்கொண்டது.

27. ஊர்களில்உங்களைச் சுற்றியுள்ளவைகளையும் நிச்சயமாக நாம் அழித்து விட்டோம்; அவர்கள் (பாவத்திலிருந்து) திரும்புவதற்காக அத்தாட்சிகளை நாம் திரும்பத் திரும்பக் காண்பித்தோம்.

28. (தங்களை அல்லாஹ்வுக்கு) சமீபமாக்கி வைக்கக்கூடிய (வணக்கத்திற்குரிய) தெய்வங்களென்று அல்லாஹ் அல்லாதவற்றை இவர்கள் எடுத்துக் கொண்டார்களே அத்தகையவர்கள் இவர்களுக்கு உதவி செய்திருக்க வேண்டாமா? இல்லை, அவர்களெல்லாம் இவர்களை விட்டு மறைந்து விட்டனர்; இது, அவர்கள் பொய்யாகக் கூறியதும், அவர்கள் இட்டுக்கட்டிக் கொண்டி ருந்தார்களே அதுவுமாகும்(என்று தெளிவாகிவிட்டது).

29. (நபியே!) ஜின்களில் சிலரை இந்தக் குர்ஆனை அவர்கள் செவியேற்பதற்காக உம்மிடம் நாம் திருப்பியதையும்(நினைவு கூர்வீராக!)பின்னர் அவர்கள் அங்கு வந்தடைந்து (சிலர் சிலரிடம்) " நீங்கள் வாய் பொத்தி இருங்கள்" என்று கூறினார்கள்; பிறகு அது முடிக்கப்பட்டபோது, தங்கள் கூட்டத்தாரிடம் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகத் திரும்பினர்.

قَالُوْا يٰقَوْمَنَآ اِنَّا سَمِعْنَا كِتٰبًا اُنْزِلَ مِنْۢ بَعْدِ مُوْسٰى مُصَدِّقًا
لِّمَا بَيْنَ يَدَيْهِ يَهْدِيْٓ اِلَى الْحَقِّ وَاِلٰى طَرِيْقٍ مُّسْتَقِيْمٍ ﴿٣٠﴾ يٰقَوْمَنَآ
اَجِيْبُوْا دَاعِيَ اللّٰهِ وَاٰمِنُوْا بِهٖ يَغْفِرْ لَكُمْ مِّنْ ذُنُوْبِكُمْ وَيُجِرْكُمْ
مِّنْ عَذَابٍ اَلِيْمٍ ﴿٣١﴾ وَمَنْ لَّا يُجِبْ دَاعِيَ اللّٰهِ فَلَيْسَ بِمُعْجِزٍ فِي
الْاَرْضِ وَلَيْسَ لَهٗ مِنْ دُوْنِهٖٓ اَوْلِيَآءُ ؕ اُولٰٓئِكَ فِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿٣٢﴾
اَوَلَمْ يَرَوْا اَنَّ اللّٰهَ الَّذِيْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَلَمْ يَعْيَ
بِخَلْقِهِنَّ بِقٰدِرٍ عَلٰٓى اَنْ يُّحْيِيَ الْمَوْتٰى ؕ بَلٰٓى اِنَّهٗ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿٣٣﴾
وَيَوْمَ يُعْرَضُ الَّذِيْنَ كَفَرُوْا عَلَى النَّارِ ؕ اَلَيْسَ هٰذَا بِالْحَقِّ ؕ قَالُوْا
بَلٰى وَرَبِّنَا ؕ قَالَ فَذُوْقُوا الْعَذَابَ بِمَا كُنْتُمْ تَكْفُرُوْنَ ﴿٣٤﴾ فَاصْبِرْ
كَمَا صَبَرَ اُولُوا الْعَزْمِ مِنَ الرُّسُلِ وَلَا تَسْتَعْجِلْ لَّهُمْ ؕ كَاَنَّهُمْ
يَوْمَ يَرَوْنَ مَا يُوْعَدُوْنَ ۙ لَمْ يَلْبَثُوْٓا اِلَّا سَاعَةً مِّنْ نَّهَارٍ ؕ
بَلٰغٌ ۚ فَهَلْ يُهْلَكُ اِلَّا الْقَوْمُ الْفٰسِقُوْنَ ﴿٣٥﴾ ع ٤

سُوْرَةُ مُحَمَّدٍ مَدَنِيَّةٌ وَهِيَ ثَمَانٌ وَّثَلٰثُوْنَ اٰيَةً وَّاَرْبَعُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلَّذِيْنَ كَفَرُوْا وَصَدُّوْا عَنْ سَبِيْلِ اللّٰهِ اَضَلَّ اَعْمَالَهُمْ ﴿١﴾

30. (அவர்களிடம்,)"எங்களுடைய கூட்டத்தார்களே! நிச்சயமாக நாங்கள் ஒரு வேதத்தைச் செவியுற்றோம்; (அது) தனக்கு முன்னுள்ளதை(வேதங்களை) உண்மைப்படுத்துகின்ற நிலையில், மூஸாவுக்குப் பின்(அது) இறக்கப்பட்டுள்ளது; அது சத்தியத்தின்(_உண்மைமார்க்கத்தின்)பாலும்,நேரான வழியின் பாலும் வழி காட்டுகிறது" என்று கூறினார்கள்.

31. "எங்களுடைய சமூகத்தாரே! அல்லாஹ்வின் அழைப்பாளருக்கு நீங்கள் பதில் கூறுங்கள்; மேலும், அவரை விசுவாசியுங்கள்; (அதன்பொருட்டு) உங்களுடைய பாவங்களை உங்களுக்கு அவன்(அல்லாஹ்) மன்னித்து விடுவான்; துன்புறுத்தும் வேதனையிலிருந்தும் உங்களை அவன் காத்துக்கொள்வான்"(என்றும்),

32. "எவர் அல்லாஹ்வின் அழைப்பாளருக்கு பதில் கூறவில்லையோ அவர் பூமியில் (அல்லாஹ்வை) இயலாமல் ஆக்கி விடுபவரல்லர்; (அல்லாஹ்வாகிய) அவனையன்றி, அவருக்கு உதவியாளர்களுமில்லை; அ(த்தகைய)வர்கள் பகிரங்கமான வழிகேட்டில் இருக்கிறார்கள்" (என்றும் ஜின்கள் கூறினார்கள்).

33. நிச்சயமாக, வானங்களையும், பூமியையும் படைத்து, இன்னும், அவைகளைப் படைத்ததால் சோர்வடையவில்லையே அத்தகைய அல்லாஹ் மரணித்தோரை உயிர்ப்பிக்க ஆற்றலுடையவன் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? ஆம்! நிச்சயமாக, அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

34. மேலும், நிராகரிப்போரை நரகத்தின் முன் கொண்டு வரப்படும் நாளில்(அவர்களிடம்,) "இது உண்மையானதாக இல்லையா?" (என்று கேட்கப்படும்) அ(தற்க)வர்கள் "எங்களிரட்சகன் மீது சத்தியமாக! ஆம், (உண்மைதான்)" என்று கூறுவார்கள். (அதற்கவர்களிடம்,) "நீங்கள் நிராகரித்துக் கொண்டிருந்ததன் காரணமாக (இதன்) வேதனையை நீங்கள் சுவைத்துக் கொண்டிருங்கள்" என்று (அல்லாஹ்) கூறுவான்.

35. (நபியே! நம்முடைய) தூதர்களிலுள்ள உறுதிமிக்கவர்கள், (கஷ்டங்களை) பொறுத்துக்கொண்டிருந்த பிரகாரமே, நீரும் பொறுமையாக இருப்பீராக! (நிராகரித்த) அவர்களுக்காக (வேதனையை) நீர் அவசரப்படவேண்டாம்; அவர்களுக்கு வாக்களிக்கப்பட்டதை அவர்கள் காணும் நாளில், (இப்புவியில்) ஒரு பகலில் ஒரு நாழிகையேயன்றி (அதிகமாகத்) தாம் தங்காதவர்களைப் போன்றிருப்பார்கள்(இது உம்மால் அவர்களுக்கு) எத்திவைக்கப்பட வேண்டியதாகும்; ஆகவே, பாவம் செய்த கூட்டத்தினரைத் தவிர (மற்றெவரும்) அழிக்கப்படுவார்களா?

---

அத்தியாயம் : 47

## முஹம்மது

வசனங்கள் : 38 மதனீ ருகூஃகள் : 4

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (அல்லாஹ்வின் அத்தாட்சிகளை) நிராகரித்துவிட்டு, அல்லாஹ்வின் பாதையை(அதில் மனிதர்கள் செல்வதை)விட்டும் தடுத்துக்கொண்டிருந்தார்களே அத்தகையோர்_அவர்களின் செயல்களை (பயனற்றதாக்கி)அவன் வீணாக்கி விட்டான்.